Australian Government
Civil Aviation Safety Authority

KNOW YOUR DRONE

# ட்ரோன் (தானியங்கி வானவூர்திகள்) பாதுகாப்பு பற்றிய முக்கிய தகவல்கள்




நீங்கள் உங்கள் ட்ரோனை தரை மட்டத்திலிருந்து 120 மீட்டர் (400 அடி) உயரத்துக்கு மேல் பறக்கவிடக் கூடாது.




நீங்கள் உங்கள் ட்ரோனை மற்றவர்களிடமிருந்து குறைந்த பட்சம் 30 மீட்டர் தொலைவிலே இருக்குமாறு வைத்திருக்க வேண்டும்.




உங்கள் ட்ரோனின் எடை 250 கிராமுக்கு மேல் இருந்தால், கட்டுபடுத்தப்பட்ட விமான நிலையத்திலிருந்து குறைந்த பட்சம் 5.5 கிலோமீட்டர் தொலைவில் பறக்கவிட வேண்டும். அந்த விமானநிலையம் பொதுவாக ஒரு கட்டுப்பாட்டுக் கோபுரத்தைக் கொண்டிருக்கும்.



நீங்கள் ஹெலிகாப்டர் தரையிறங்கும் தளத்துக்கு அருகிலோ அல்லது கட்டுப்பாட்டுக் கோபுரம் இல்லாத சிறிய விமானத்தளத்துக்கு அருகிலோ இருந்தால், உங்கள் ட்ரோனை 5.5 கிலோமீட்டருக்கு உள்ளேயே பறக்க விடலாம். அருகில் மனிதர்களை ஏந்திவரும் விமானம் இருப்பதாகத் தெரிந்தால், நீங்கள் உங்கள் ட்ரோனை அவ்விடத்தை விட்டுத் திசைதிருப்பி, விரைவாகவும் பாதுகாப்பாகவும் தரையிறக்க வேண்டும்.



நீங்கள் மனிதர்கள் மீதோ அல்லது தலைக்கு மேலோ அல்லது மக்கள்தொகை அதிகமாக உள்ள இடங்களிலோ பறக்கவிடக் கூடாது. கடற்கரைகள், பூங்காக்கள், நிகழ்ச்சிகள், அல்லது போட்டி நடந்துகொண்டிருக்கும் விளையாட்டு மைதானங்கள் போன்றவையும் இதில் அடங்கும்.



உங்கள் ட்ரோனை உங்கள் பார்வை வளையத்துக்குள்ளே வைத்திருக்க வேண்டும். இதன் பொருள் என்னவென்றால், ட்ரோனை எப்போதும் (ஒரு கருவியின் வழியாகவோ, மின்திரை வழியாகவோ அல்லது கண் கண்ணாடி வழியாகவோ பார்ப்பதை விட) உங்கள் சொந்தக் கண்களால் பார்க்க முடிகின்ற அளவில் இருக்க வேண்டும்.



உங்கள் ட்ரோனை பொதுமக்கள் பாதுகாப்புக்குப் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய இடத்திற்கு மேலோ, அருகிலோ அல்லது அவசர நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இடத்திலோ நீங்கள் பறக்கவிடக் கூடாது. இதில் கார் விபத்து, காவல்துறை நடவடிக்கைகள், நெருப்பு அல்லது தீயணைப்பு முயற்சிகள் அல்லது தேடுதல் மற்றும் மீட்புப்பணி போன்ற சூழ்நிலைகளும் அடங்கும்.



நீங்கள் உங்கள் ட்ரோனை வேலைக்காகவோ அல்லது வேலையின்போதோ (வணிகரீதியாக) பறக்க வைக்க விரும்பினால், நீங்கள் பின்பற்ற வேண்டிய கூடுதல் விதிமுறைகள் உள்ளன. நீங்கள் உங்கள் ட்ரோனைப் பதிவுசெய்து உரிமம் அல்லது அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.



மற்றொரு ஆகாய விமானத்துக்கோ, நபருக்கோ அல்லது சொத்துக்கோ ஆபத்தை ஏற்படுத்தும் விதத்தில் உங்கள் ட்ரோனை இயக்கக் கூடாது என்பதை நினைவில் வைத்திருக்கவும்.



தனிப்பட்ட அந்தரங்க உரிமையை மதிக்கவும். மக்களை அவர்களது அனுமதியின்றிப் பதிவு செய்யவோ, புகைப்படம் எடுக்கவோ கூடாது — இது மற்றைய சட்டங்களை மீறுவதாகும்.



நீங்கள் ஒரே சமயத்தில் ஒரு ட்ரோனை மட்டுமே பறக்கவிட வேண்டும்.



நீங்கள் பகலில் மட்டுமே பறக்கவிட வேண்டும், அத்துடன் மேகம் அல்லது பனிமூட்டத்தின் ஊடாகப் பறக்கவிடக் கூடாது.

**»» KNOWYOURDRONE.GOV.AU**

1908.2916 (Tamil)